ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2199/10 - 2020 ඔක්තෝබර් මස 27 වැනි අඟහරුවාදා - 2020.10.27
2199/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், 1996 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதிய 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட அல்லது இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் அல்லது ஏதும் நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம், பின்வரும் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

2020, ஒற்றோபர் 26.

01. **நடைமுறைப்படுத்தப்படும் திகதி** : இச் சேவைப்பிரமாணக் குறிப்பு 2020.10.27 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

02. **நியமன அதிகாரி** : அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட சுகாதார சேவைக்குழு

03. **சேவை வகுதி/ சேவை வகுதிகள் :**

3.1 சேவை வகுதி : மருத்துவ உத்தியோகத்தர்
நிறைவேற்றுநர்
சிரேஷ்ட நிறைவேற்றுநர்

3.2 தரம் : மருத்துவ உத்தியோகத்தர் - ஆரம்ப தரம்
இரண்டாம் தரம்
மூன்றாம் தரம்

நிறைவேற்றுநர் - நிருவாகம் தரம் I
நிருவாகம் தரம் II

சிரேஷ்ட நிறைவேற்றுநர் - விசேட நிபுணத்துவ தரம்

04. **கடமைகள்.**- நாடளாவிய சேவையான இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஊடாக சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கக்கூடிய காரணிகளை அடையாளம் கண்டு நிபுணத்துவ சேவைகளுடன் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை நடைமுறைப்படுத்தல். சுகாதாரம் தொடர்பிலான பிரச்சினைகளை எதிர்வுகூறல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீடு, சுகாதாரக் கல்வி, ஆராய்ச்சிப் பணிகள், சமூக சுகாதார நடவடிக்கைகள், மருந்துப் பொருட்கள் உற்பத்தி, முகாமைத்துவம், தரப்படுத்தல், மூலிகைச் செய்கை, ஆயுர்வேத சேவை முகாமைத்துவம் போன்ற பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஆயுர்வேதம், சித்தாயுர்வேத, யூனானி, சுதேச சிகிச்சைகள் ஆகிய துறைகளுடன் இணைந்து செயற்படல் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் பொதுவான கடமைகளாகும்.

05. **சம்பளம்** :

5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் :
SL*2-2016* (ஆரம்ப தரம், தரம் II மற்றும் தரம் I)

SL*1-2016* (நிருவாகம் தரம் II தரம் I)
SL*3-2016* (விசேட நிபுணத்துவ தரம்)

5.2 சம்பள அளவுத் திட்டம் :

SL*2-2016* - ரூ. 52,955 - 3 x 1,335 - 7 x 1,345 - 2 x 1,630 - 16 x 2,170 - ரூபா 1,04,355
SL*1-2016* - ரூ. 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895
SL*3-2016* - ரூ. 88,000 - 12 x 2,700 - ரூபா 1,20,400

5.3 தரங்களுக்கு உரிய ஆரம்ப சம்பள படிநிலை

| தரம் | சம்பள குறியீட்டு இலக்கம் | ஆரம்ப சம்பள படிநிலை | ஆரம்ப சம்பள நிலை (ரூ) |
|---|---|---|---|
| தொடக்க தரம் | SL 2 - 2016 | படிநிலை 02 | ரூ. 54,290 |
| தரம் II | SL 2 - 2016 | படிநிலை 05 | ரூ. 58,305 |
| தரம் I | SL 2 - 2016 | படிநிலை 14 | ரூ. 71,805 |
| நிருவாகம் தரம் II | SL 1 - 2016 | படிநிலை 12 | ரூ. 62,595 |
| நிருவாகம் தரம் I | SL 1 - 2016 | படிநிலை 20 | ரூ. 76,175 |
| விசேட நிபுணத்துவ தரம் | SL 3 - 2016 | படிநிலை 01 | ரூ. 88,000 |

06. **சேவைக்குரிய பதவிகள்** :

6.1 அங்கீகரிக்கப்பட்ட தரங்கள் பதவிப் பெயர் மற்றும் எண்ணிக்கை

| அங்கீகரிக்கப்பட்ட பதவித் தரங்கள் | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| நிர்வாகம் தரம் I | பணிப்பாளர்- ஆயுர்வேத போதனா மருத்துவமனைகள் | 04 |
| | பணிப்பாளர்- ஆயுர்வேத ஆராய்ச்சி மருத்துவமனைகள் | 04 |
| | மாகாண ஆயுர்வேத ஆணையாளர் | 09 |
| நிருவாகம் தரம் II | பிரதிப் பணிப்பாளர் - ஆயுர்வேத போதனா மருத்துவமனைகள் | 02 |
| | பணிப்பாளர் - ஆயுர்வேத ஆராய்ச்சி மருத்துவமனைகள் | 01 |
| | மாகாண பிரதி / உதவி ஆணையாளர் | 10 |
| | பணிப்பாளர் மாகாண ஆயுர்வேத மருத்துவமனைகள் | 03 |
| | உதவி ஆணையாளர் (நுட்பமுறை) | 01 |
| | உதவி ஆணையாளர் (நுட்பமுறைக் கல்வி) | 01 |

| அங்கீகரிக்கப்பட்ட பதவித் தரங்கள் | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| விசேட நிபுணத்துவ மருத்துவர் தரம் | விசேட நிபுணத்துவ மருத்துவர் | 121 |
| மருத்துவ உத்தியோகத்தர் தரம் I | பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தர் | 04 |
| | மேற்பார்வை சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் | 09 |
| | மருத்துவ அத்தியட்சகர் (ஆயுர்வேத) | 24 |
| | நிலைய பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தர் (மருந்துப் பொருட்கள் உற்பத்திப் பிரிவு) | 11 |
| | பிரதான நகர ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் | 02 |
| மருத்துவ உத்தியோகத்தர் ஆரம்ப மற்றும் தரம் II | விஞ்ஞானி (தாவரவியல் / இரசாயனவியல்) | 02 |
| | ஆயுர்வேத சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் | 22 |
| | விரிவுரையாளர் | 05 |
| | மருத்துவ உத்தியோகத்தர் (ஆய்வு) | 05 |
| | மருத்துவ உத்தியோகத்தர் (விசாரணை) | 01 |
| | ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் | 1680 |
| | சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் | 832 |

6.2 இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை :

| | |
|---|---|
| நிர்வாகம் தரம் I | 17 |
| நிர்வாகம் தரம் II | 18 |
| விசேட நிபுணத்துவ மருத்துவர் தரம் | 121 |
| மருத்துவ உத்தியோகத்தர் தரம் I | 50 |
| மருத்துவ உத்தியோகத்தர் தரம் II | 2547 |

ஒவ்வொரு தரத்துக்கும் பதவியுயர்த்துவதற்காக ஆரம்ப, II மற்றும் I தரம், இணைந்த எண்ணிக்கைக்கு உரிய தரங்களாக கருதப்படும்.

6.3 பதவியின்/பதவிகளின் தன்மை : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

**குறிப்பு**.- ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

07. **ஆட்சேர்ப்புத் திட்டம்** :

7.1 ஆட்சேர்ப்பு வீதம் :

| பிரிவு | வீதம் |
|---|---|
| திறந்த | 100% |
| மட்டுப்படுத்தப்பட்ட | ஏற்புடையதல்ல |
| திறமை | ஏற்புடையதல்ல |

7.2 திறந்த ஆட்சேர்ப்பு

7.2.1 ஆட்சேர்ப்புத் தரம் : இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரம் :

7.2.2 தகைமைகள் :

7.2.2.1 கல்வித் தகைமை :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட, ஆயுர்வேத/சித்தாயுர்வேதம்/யூனானி மருத்துவவியல் தொடர்பில் ஐந்து வருட பட்டப் படிப்பின் பின்னர் ஒரு வருட உள்ளக மருத்துவமனைப் பயிற்சியைப் பெற்றிருத்தல்.

7.2.2.2 தொழில்சார் பயிற்சி :
இலங்கை ஆயுர்வேத மருத்துவச் சபையில் பதிவுச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

7.2.2.3 அனுபவம்: ஏற்புடையதல்ல

7.2.2.4 உடல் ரீதியான தகைமைகள் :

அனைத்து அபேட்சகர்களும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ரீதியான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.2.2.5 வேறு :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் நன்நடத்தை உடையவராகவும் சிறந்த உடல் தகைமையைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான 7.2.2 தொடக்கம் 7.2.3 வரையிலான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று குறித்த தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2.3 வயதெல்லை :

7.2.3.1 ஆகக் குறைந்த வயதெல்லை : 22 வருடங்கள்

7.2.3.2 ஆகக் கூடிய வயதெல்லை : 45 வருடங்கள்

7.2.4 ஆட்சேர்ப்பு முறை :
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக் கொண்ட, ஆயுர்வேத / சித்தாயுர்வேத / யூனானி பட்டத்தைப் பெற்ற பட்டதாரிகள் உரிய ஆண்டுகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிடுகின்ற திறமை பட்டியலின் ஒழுங்குமுறையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். பல வருடங்களுக்குரிய பட்டதாரிகள் விண்ணப்பதாரர்களாக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அந்தந்த ஆண்டுகளின் திறமைப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு குறித்த திறமைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு முறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பொதுவான நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

7.2.4.1 பொதுவான நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி : நியமன அதிகார பீடத்தினால் (தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா எனவும், உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைப் பரிசோதனை செய்வதற்காகவுமான பொதுவான நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். இதன் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

7.2.5 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை :
அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் அல்லது பகிரங்க நாளேடுகளில் விளம்பரப்படுத்தல் அத்துடன் இணையத்தளத்தில் விளம்பரப்படுத்துவதன் மூலம்.

08. **வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை :**

8.1

| வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை எந்தளவு காலத்துக்குள் சித்தியடைய வேண்டும் என்பது பற்றி | வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை எழுத்துமூலம் /தொழில்சார்/ சான்றிதழ் பாடநெறி /வேறு |
|---|---|---|
| I ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்துக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர் | எழுத்து மூலப் பரீட்சை. பாட விதானம் பின்னிணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ளது. |

8.2 வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை நடத்தப்படும் காலப்பகுதி :
ஆண்டொன்று இரண்டு தடவைகள்

8.3 வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடத்துகின்ற அதிகாரி :
பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிருவாக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள சுதேச மருத்துவத்துறை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

09. **மொழித் தேர்ச்சி**

9.1

| மொழி | பெற்றுக் கொள்ள வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| அரச கருமமொழி | அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் உரிய அரச கருமமொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலத்துக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். க.பொ.த (சா.த.) பரீட்சையில் தாய்மொழியில் சித்தியடைதல் போதுமானதாகும். |
| மற்றைய அரச கருமமொழி | அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் இதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக உரிய மட்டத்திலான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

10. **தரங்களுக்கான பதவியுயர்வு :**

10.1 ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்தில் இருந்து தரம் II க்கு பதவியுயர்த்துதல்

10.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

i. ஆரம்ப தரத்தில் 02 வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மற்றும் இரண்டு (02) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் வேண்டும்.
ii. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்துக்கு அமைவாக பதவியுயர்வுத் திகதிக்கு முன்னரான இரண்டு (02) வருடங்கள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையைக் காட்டியிருத்தல் வேண்டும்.
iii. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய காலத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.1.2 பதவியுயர்வு முறை :
தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் உரிய மாதிரிப் படிவத்துக்கு அமைவாக நியமன அதிகாரிக்கு விண்ணப்பிக்குமிடத்து நியமன அதிகாரியினால் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமை பெறுகின்ற திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் தரம் II க்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்த்தப்படுவர்.

10.2 ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் II இலிருந்து தரம் I க்கு பதவியுயர்த்துதல்.

10.2.1 பட்டப்பின் படிப்பு பட்டம் /பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பெற்றுள்ள மருத்துவ உத்தியோத்தர்களை பதவியுயர்த்துதல்

பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

i. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
ii. சேவை வகுதியின் தரம் இரண்டில் ஆறு (06) வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மற்றும் ஆறு (06) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் வேண்டும்.
iii. அராங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.
iv. சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட பட்டப்பின் படிப்பு தகைமையொன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றின்றிலிருந்து பெற்றிருத்தல் அத்துடன் குறித்த பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் அதனை உறுதிப்படுத்தலும் வேண்டும்.
v. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய காலத்துக்குள் சித்தியடைந்திருத்தல்.
vi. ஏற்புடைய மட்டத்தில் ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை உரிய காலத்துக்குள் பெற்றிருத்தல்.

10.2.2 பட்டப்பின் படிப்பு பட்டம் / பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றிராத மருத்துவ உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

i. நியமனம் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.
ii. சேவை வகுதியின் தரம் இரண்டில் பன்னிரெண்டு (12) வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மற்றும் பன்னிரெண்டு (12) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும் வேண்டும்.
iii. அராங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.
iv. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய காலத்துக்குள் சித்தியடைந்திருத்தல்.
v. உரிய மட்டத்திலான ஏனைய அரச கரும மொழித் தேர்ச்சியை உரிய காலத்துக்குள் பெற்றிருத்தல்.

10.2.3 பதவியுயர்வு முறை.- தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் உரிய மாதிரிப் படிவத்துக்கு அமைவாக நியமன அதிகாரிக்கு விண்ணப்பிக்குமிடத்து நியமன அதிகாரியினால் பரிசீலனை செய்ததன் பின்னர் தகைமை பெறுகின்ற திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வண்ணம் தரம் I க்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்த்தப்படுவர்.

10.3 ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிருவாகம் தரம் II க்கு பதவியுயர்த்துதல்

10.3.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

i. ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் II இல் எட்டு (08) வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் எட்டு (08) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் அல்லது ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் I உத்தியோகத்தராக இருத்தல்.

ii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.

iii. III வது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆயுர்வேத மருத்துவ முகாமைத்துவம் தொடர்பில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

iv. முகாமைத்துவத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி/ போதனா ஆயுர்வேத மருத்துவமனையொன்றில், மாவட்ட ஆயுர்வேத மருத்துவமனையொன்றில்/ கிராமிய ஆயுர்வேத மருத்துவமனையொன்றில், பொறுப்பான உத்தியோகத்தர்/ மருத்துவ அத்தியட்சகராக 03 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். (ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிருவாகத் தரம் II அல்லது தரம் I க்கு உரிய பதவியில் முறைப்படி நியமனம் அல்லது பதில் கடமை நியமனம் பெற்று சேவையாற்றியுள்ள சேவைக்காலத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.)

10.3.2 பதவியுயர்வு முறை.- பதவி வெற்றிடங்கள் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் (ஒவ்வொரு வருடமும் சனவரி 01 ஆந் திகதிக்கு மற்றும் யூலை 01 ஆந் திகதிக்கு) சேவையில் உள்ள தகைமை பெற்ற 10.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடையே விண்ணப்பங்கள் கோரப்படும். நியமன அதிகாரியினால் நேர்முகப் பரீட்சை சபையொன்றை நியமிக்கப்பட்டு அதற்குரிய புள்ளிகள் வழங்கும் திட்டம் அங்கீகரிக்கப்படுவதுடன் அதற்கிணங்க நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அந்த நேர்முகப் பரீட்சை சபையின் சிபாரிசை அமைச்சுச் செயலாளரின் சிபாரிசுடன் நியமன அதிகாரியிடம் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் பதவியுயர்வுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10.4 ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிருவாகத் தரம் II இலிருந்து நிருவாகத் தரம் I க்கு பதவியுயர்த்துதல்

10.4.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

i. ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிருவாகத் தரம் II இல் 03 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் மூன்று (03) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

ii. அராங்க சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.

iii. III ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆயுர்வேத மருத்துவ முகாமைத்துவம் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பட்டப்பின்படிப்பு தகைமையைப் பெற்றிருத்தல்.

10.4.2 பதவியுயர்வு முறை.- பதவி வெற்றிடங்கள் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் (ஒவ்வொரு வருடமும் சனவரி 01 ஆந் திகதிக்கு மற்றும் யூலை 01 ஆந் திகதிக்கு) சேவையில் உள்ள தகைமை பெற்ற 10.4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடையே விண்ணப்பங்கள் கோரப்படும். நியமன அதிகாரியினால் நேர்முகப் பரீட்சை சபையொன்றை நியமிக்கப்பட்டு அதற்குரிய புள்ளிகள் வழங்கும் திட்டம் அங்கீகரிக்கப்படுவதுடன் அதற்கிணங்க நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அந்த நேர்முகப் பரீட்சை சபையின் சிபாரிசை அமைச்சுச் செயலாளரின் சிபாரிசுடன் நியமன அதிகாரியிடம் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் பதவியுயர்வுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10.5 ஆயுர்வேத மருத்துவ சேவையின் விசேட நிபுணர் தரத்துக்கு பதவியுயர்த்துதல்.

10.5.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

i. ஆயுர்வேத மருத்துவ சேவையின் தரம் II இல் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தரொருவராக இருத்தல்.

ii. IV வது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதும் விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் 03 வருடங்களுக்குக் குறையாத முழு நேர ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி மருத்துவக் கலாநிதி (Doctor of Medicine) அல்லது ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி அறுவைச் சிகிச்சை மருத்துவ முதுமாணி (Master of Surgery) பட்டப்பின் படிப்பு சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல். மற்றும் உரிய பல்கலைக்கழக முகாமைத்துவ சபையினால் அது உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

iii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்படாத ஒருவராக இருத்தல்.

iv. மேலே குறிப்பிட்ட 10.5.1 இல் i மற்றும் ii இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றதன் பின்னர் கற்றுக்கொண்ட விடயத்துக்கு ஏற்புடையவாறு ஆயுர்வேத திணைக்களத்தில் விசேட நிபுணத்துவ மருத்துவர் ஒருவரின் கீழ் 02 வருடங்களுக்கு குறையாத முழுநேர சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிப் பயிற்சியொன்றைப் பெற்றதன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத/சித்தாயுர்வேத/ யூனானி பட்டப்பின் படிப்பு நிறுவனமொன்றினால் நிறுவப்படுகின்ற கற்கை சபையின் (Board of Study) பதிவுச் சான்றிதழொன்றைப் (Board Certificate) பெற்றிருத்தல்.

**குறிப்பு** :- மேலே 10.5.1 iv இல் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை சபை நிறுவும் வரையில் மேலே 10.5.1 i தொடக்கம் 10.5.1 iii வரையிலான தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் கற்றுக்கொண்ட பாடத்துக்கு ஏற்புடையவாறு ஆயுர்வேத திணைக்களத்தில் விசேட நிபுணத்துவ மருத்துவர் ஒருவரின் கீழ் 02 வருடங்களுக்கு குறையாத முழுநேர சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிப் பயிற்சியொன்றைப் பெற்றிருத்தல் என்னும் தகைமையை மாத்திரம் கருத்திற்கொண்டு விசேட நிபுணர் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவர்.

10.5.2 பதவியுயர்வு முறை.- பதவி வெற்றிடங்கள் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் (ஒவ்வொரு வருடமும் சனவரி 01 ஆந் திகதிக்கு மற்றும் யூலை 01 ஆந் திகதிக்கு) சேவையில் உள்ள தகைமை பெற்ற 10.5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடையே விண்ணப்பங்கள் கோரப்படும். நியமன அதிகாரியினால் நேர்முகப் பரீட்சை சபையொன்றை நியமிக்கப்பட்டு அதற்குரிய புள்ளிகள் வழங்கும் திட்டம் அங்கீகரிக்கப்படுவதுடன் அதற்கிணங்க நேர்முகப் பரீட்சை சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அந்த நேர்முகப் பரீட்சை சபையின் சிபாரிசை அமைச்சுச் செயலாளரின் சிபாரிசுடன் நியமன அதிகாரியிடம் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் பதவியுயர்வுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **பதவிகளுக்கு நியமித்தல்** : V பின்னிணைப்பு ஏற்புடையது.

12. **சேவைக்குரிய நிபந்தனைகள்** :

12.1 பதவியில் உறுதிப்படுத்தும் நிபந்தனைகள்.- ஆரம்ப தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் மூன்று வருட கால தகுதிகாண் காலத்துக்கு உட்படல் வேண்டும். பதவியில் உறுதிப்படுத்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

12.1.2 நியமனத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் தகைமைகளை கட்டாயம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

i. தகுதிகாண் காலத்தில் சேவை திருப்திகரமாக இருத்தல்.

ii. தகுதிகாண் காலத்தில் உழைக்க வேண்டிய அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தல்.

iii. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

12.2 இந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவையின் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகளுக்குரிய ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் நியதிகள் மற்றும் கட்டளைகளுக்கும், அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் மற்றும் சுற்றறிக்கைகளுக்கும் ஆயுர்வேத மருத்துவ சேவையைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் கட்டுப்படல் வேண்டும்.

12.3 ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் நாடு தழுவிய ரீதியில் உள்ள பதவிகளில் சேவையாற்றுவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர். எனவே, சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற எந்தவொரு உத்தியோகத்தரும் நாட்டின் எந்தவொரு சேவை நிலையத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

12.4 இடமாற்றங்கள்.- அனைத்து ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களினதும் இடமாற்றங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இடமாற்றத் திட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

**13. பொருள் கோடல்கள் மற்றும் வரைவிலக்கணங்கள் :**

(அ) 'சேவைப் பிரமாணக் குறிப்பு' என்பது இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

(ஆ) 'ஆணைக்குழு' என்பது அரசாங்க சேவைகள் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

(இ) 'சேவை' என்பது இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை எனப் பொருள்படும்.

(ஈ) 'அமைச்சின் செயலாளர்' என்பது சுதேச மருத்துவத் துறைக்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

(உ) 'ஆயுர்வேத ஆணையாளர்' என்பது ஆயுர்வேதத் திணைக்களத்தின் பிரதானி எனப் பொருள்படும்.

(ஊ) 'அமைச்சு'என்பது சுதேச மருத்துவத் துறைக்குப் பொறுப்பான நிரல் அமைச்சு எனப் பொருள்படும்.

(எ) செயலூக்கமுள்ள சேவைக் காலம் என்பது சம்பளமற்ற விடுமுறைக் காலம் உள்ளடக்கப்படாத, அமைச்சரவையினால் கொள்கை ரீதியாக செயலூக்கமுள்ள சேவைக் காலமாக கருதப்பட வேண்டும் என விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற விடுமுறைக் காலம் உள்ளடங்கலாக உத்தியோகத்தரொருவர் அவரது பதவிக்குரிய சம்பளத்தை பெற்றுக் கொண்டிருந்த சேவைக் காலமாகும்.

**14. ஆயுர்வேத மருத்துவ சேவைக்கு உள்ளீர்த்தல் :**

i. அந்தந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு சேவைக் காலம் கணக்கிடப்படும். எவ்வாறெனினும் உள்ளீர்ப்பு காரணத்தால் உரியவரின் சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் நிகழாது. உள்ளீர்ப்புக்கு முன்னர் இருந்த சம்பள ஏற்றத் திகதி மாற்றமின்றி நடைமுறையில் இருத்தல் வேண்டும். அவ்வாறே சம்பளத்தை மாற்றியமைக்கும் போது உரியவர் இறுதியாகப் பெற்ற சம்பளப் படிநிலைக்கு புதிய சம்பளப் படிநிலை நேரொத்த அடிப்படையில் இருப்பதன் பேரில் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4.4 வது பிரிவுக்கு அமைவாக அடுத்த மேற்பட்ட சம்பளப் படிநிலையில் அமர்த்துதலும் ஆகாது.

ii. இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் தினத்தன்று ஆயுர்வேத மருத்துவ சேவையில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரம் இந்த உள்ளீர்ப்பு ஏற்பாடுகள் ஏற்புடையதாகும். உரிய திகதிக்கு அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 க்கும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் சம்பளத்தைப் பெறுகின்ற அனைத்து ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களும் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு பின்வருமாறு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் தினத்தன்று ஆயுர்வேத மருத்துவ சேவையின்,

(அ) ஆரம்ப தரத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஆரம்ப தரத்துக்கு உள்ளீர்க்கப்படுவர்.

(ஆ) தரம் II இல் சேவையில் ஈடுபடுள்ள உத்தியோகத்தர்கள் தரம் II க்கு உள்ளீர்க்கப்படுவர்.

(இ) தரம் I இல் சேவையில் ஈடுபடுள்ள உத்தியோகத்தர்கள் தரம் I க்கு உள்ளீர்க்கப்படுவர்.

(ஈ) விசேட நிபுணர் தரத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விசேட நிபுணர் தரத்துக்கு உள்ளீர்க்கப்படுவர்.

15. **இடைக்கால ஏற்பாடுகள் :**

15.1 1996.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆயுர்வேத டிப்ளோமாதாரர்களின் இறுதி டிப்ளோமாதாரி மருத்துவ உத்தியோகத்தர் ஆரம்ப தரத்துக்கு உள்ளீர்க்கப்படும் வரையில் 1996.05.20 ஆந் திகதியிட்ட 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் ஆரம்ப தரத்துக்கான உள்ளீர்ப்பு ஏற்பாடுகள் அவ்வாறே செயல்வலுவில் இருக்கும்.

15.2 புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இருந்த 1996.05.20 ஆந் திகதியிட்ட 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே இந்த இடைக்கால ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

16. **ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள்.**- இந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

17. **வேறு.**- இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி வாசகமே மேலோங்கி நிற்கும்.

## பின்னிணைப்பு I

1.1 பரீட்சையின் பெயர் : இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

1.2 பரீட்சை தொடர்பான விபரங்கள் :

| வினாத் தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|
| 1. நிதி முறைமைகள் | 02 மணி | 100 | 40 |
| 2. தாபன ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறை விதிகள் கோவை | 02 மணி | 100 | 40 |
| 3. மருத்துவமனை நிருவாகம் | 02 மணி | 100 | 40 |

1.3 பரீட்சைக்கான பாட விதானம் :

| வினாத்தாளின் பெயர் | பாடப் பரப்பு |
|---|---|
| 1. நிதி முறைமைகள் | (அ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம் 1 வது தொகுதி (X வது அத்தியாயம் நீங்கலாக) |
| 2. தாபன ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறை விதிகள் கோவை | (ஆ) தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் கோவை |
| 3. மருத்துவமனை நிர்வாகம் | (அ) மருத்துவமனைகள் தொடர்பில் அமுலிலுள்ள பொதுவான சட்டவிதிகள்<br>(ஆ) மருத்துவமனைகளை சுத்தமாக வைத்திருத்தல்<br>(இ) நோயாளிகள் தொடர்பில் அமுலிலுள்ள சட்ட விதிகள்<br>(ஈ) நோயாளிகளுக்கு உரிய உணவு பானங்கள் வழங்கல் தொடர்பிலான விதிகள்<br>(உ) மருந்து உற்பத்திச்சாலை கட்டுப்பாடு<br>(ஊ) நோயாளர்களை அனுமதிப்பது தொடர்பில் அமுலிலுள்ள சட்ட விதிகள்<br>(எ) மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் முதல் கனிஷ்ட ஊழியர்கள் வரை அவர்களுக்குரிய கடமைகள் தொடர்பிலான புரிதல்<br>(ஏ) ஆயுர்வேதத் திணைக்களத்தின் பொதுவான நிர்வாக விதிகள்<br>(ஐ) ஆயுர்வேதத் திணைக்களத்தின் களஞ்சியசாலைகளின் கணக்குகள், எழுத்தாவணங்கள், புத்தகங்கள் என்பவற்றைப் பேணிவரல் பற்றிய ஒழுங்கு விதிகள்<br>(ஒ) ஆயுர்வேத திணைக்களத்தின் பணிக்கடமை ஒழுங்கமைப்புக் கோவை |

**பின்னிணைப்பு** II

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவ சேவையின் முதலாம் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் பின்வரும் விடயப் பரப்பில் ஆகக் குறைந்தது ஒரு கல்வியாண்டு பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட பட்டப் பாடநெறியொன்றை கற்றிருத்தல் வேண்டும். இந்த பட்டப் பின் படிப்பு டிப்ளோமா / பட்டப் பின்படிப்பு பாடநெறி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / பட்டப் பின்படிப்பு நிறுவனமொன்றிலிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

சிபாரிசு செய்யப்படும் பாடங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | அறுவைச் சிகிச்சை | சூடாக்கி உட்செலுத்தும் சிகிச்சை, தீக் காயங்களுக்கான சிகிச்சை, உடைவு முறிவுச் சிகிச்சை, கட்டி, காயங்களுக்கான சிகிச்சை, பொதுவான அறுவைச் சிகிச்சை, குதவழி நோய், சிறுநீரக நோய், அட்டைச் சிகிச்சை உட்பட அறுவைச் சிகிச்சை |
| 2. | கண்,மூக்கு,தொண்டை | பற் சிகிச்சை, கண் சிகிச்சை, தலையிடி நோய் பொதுவான கண், மூக்கு, தொண்டை நோய் |
| 3. | உடற்கூறு சிகிச்சை | பொதுவான உடற்கூறு சிகிச்சை, நோய் தடுப்பு, உளவியல் நோய் சிகிச்சை, பஞ்சகர்ம, நரம்பு நோய், தோல் நோய், மூட்டு நோய் உட்பட உடற்கூறு சம்பந்தமான நோய்கள் |
| 4. | பூதவியல் | பூதவியல் சிகிச்சை முறைகள், சோதிடம், சத்வாவஜய மற்றும் தைவ வியாபாஷர சிகிச்சை முறைகள் ( Sathwawaja and Daiwa Vyapasra therapy) |
| 5. | சிறுவர் மருத்துவம் | குமார ரோகம், மகப்பேறு மற்றும் பெண்நோயியல் |
| 6. | நஞ்சியல் | விஷத்துக்கான சிகிச்சை, பொதுவான நச்சியல் |
| 7. | சமூக சுகாதாரம் | பொதுச் சுகாதாரச் சிகிச்சை, சமூக சுகாதார சிகிச்சை, யோகா |
| 8. | மருந்தியலும் மருந்தாக்கவியலும் | சுவையின் பிரிவுகள், மருந்தியலும் மருந்தாக்கவியலும் |
| 9. | வேதியியல் | |
| 10. | வாஜீகரணம் | |
| 11. | ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவம் | |

12. மேலே குறிப்பிட்ட 11 விடயங்களுக்கு மேலதிகமாக வேறு விடயங்களுக்கு ஏற்புடையதாக நிரல் அமைச்சின் முழுமையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கற்றுள்ள பட்டப் பின்படிப்பு அல்லது பட்டப்பின் படிப்பு டிப்ளோமா தொடர்பில் நிரல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற மூன்று பேர் அடங்கிய குழுவொன்றின் சிபாரிசின் அடிப்படையில் முதலாம் தரத்துக்கு பதவியுயர்த்துவது தொடர்பில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## பின்னிணைப்பு III

**நிருவாகத் தரம் I**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனமொன்றில், பட்டப்பின் படிப்பு கல்வி நிறுவனமொன்றில் அல்லது பல்கலைக்கழகமொன்றில் பெற்ற இரண்டு வருடங்களுக்கு குறையாத ஆயுர்வேத மருத்துவ முகாமைத்துவம் தொடர்பிலான பட்டப் பின்படிப்பை பூர்த்தி செய்திருத்தல்.

**நிருவாகத் தரம் II**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனமொன்றில், பட்டப்பின் படிப்பு கல்வி நிறுவனமொன்றில் அல்லது பல்கலைக்கழகமொன்றில் பெற்ற இரண்டு வருடங்களுக்கு குறையாத ஆயுர்வேத மருத்துவ முகாமைத்துவம் தொடர்பிலான பட்டப் பின் டிப்ளோமாவை பூர்த்தி செய்திருத்தல்.

## பின்னிணைப்பு IV

விசேட நிபுணத்துவ தரம்

"விசேட நிபுணத்துவ தரம்" என்பது 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தில் 'ஆயுர்வேதம்' எனப் பொருள் கோடப்பட்டுள்ள மருத்துவ முறைக்கு அமைவாக,

1) பொது மருத்துவம்/ மொஅலஜத் (General Ayurveda / Siddha / Unani Medicine)
2) சமூக மருத்துவம்/தஹப்புதீ வசமாஜி திபி (Community Medicine)
3) மருந்தியல் / இல்முல் அத்வியா (Materia Medica)
4) அறுவை மருத்துவம்/ ஜராஹத் (Ayurveda / Siddha/Unani Surgery)
5) கண்,மூக்கு,தொண்டை/(Ayurveda / Siddha/Unani ENT & Ophthalmology)
6) குழந்தை மருத்துவம் / அம்ராஸ் ஏ நிஸ்வான் வகபாலத் (Ayurveda / Siddha/ Unani Pediatrics)
7) மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் / மகளிர் மற்றும் சூழ் மருத்துவம்/ (Ayurveda / Siddha/Unani Gynecology and Obstetrics)
8) பூதவியல் (Ayurveda / Siddha/ Unani Demenology)
9) நஞ்சு மருத்துவம் / (Ayurveda / Siddha/ Unani Toxicology)
10) சுதேச மருத்துவம் (Indigenous Medicine)

போன்ற துறைகளில் ஏதாவது விடயமொன்று தொடர்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் 03 வருடங்களுக்குக் குறையாத முழுநேர பட்டப்பின் படிப்பு பாடநெறியொன்றைக் கற்று பின்னர் விடயத்துக்கு ஏற்புடையவாறு விசேட நிபுணத்துவ மருத்துவர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் 02 வருடங்களுக்குக் குறையாத முழுநேர சிகிச்சை / ஆராய்ச்சி/ பயிற்சியைப் பெற்றதன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத / சித்தாயுர்வேத / யூனானி பட்டப்பின் படிப்பு நிறுவனமொன்றில் நிறுவப்பட்ட கற்கை சபையின் (Board of Study) பதிவுச் சான்றிதழைப் (Board Certificate) பெற்றிருத்தல்.

அத்துடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 10 பிரதான பாடங்களுக்குரிய உப பாடங்களுக்காக எதிர்வரும் காலத்தில் வழங்கப்படவுள்ள எம்.டீ/எம்.எஸ் ஆயுர்வேத /சித்தாயுர்வேத/ யூனானி பட்டப்பின் படிப்பு விசேட நிபுணர் தரத்துக்காக சிபாரிசு செய்யப்படும்.

| | நிபுணத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் |
|---|---|---|
| 1. | உடற்கூறு சிகிச்சை | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>உடற்கூறு சிகிச்சை(General Ayurveda / Siddha / Unani Medicine) உடற்கூறு சிகிச்சை பஞ்சகர்ம (Panchakarma), நோயியல் (Ayurveda/Siddha/Unani Pathology), உடற்கூறு சிகிச்சை புத்துணர்ச்சி மற்றும் பாலுணர்வு (Rejuvenation and Aphrodisiac) |
| 2. | பொதுச் சுகாதாரம் | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>சமூக மருத்துவம் (Ayurveda/Siddha/Unani Community Medicine), போசணை (Ayurveda/ Siddha/Unani Nutrition) |
| 3. | மருந்தியலும் மருந்தாக்கவியலும் | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>மருந்தியல் (Ayurveda /Unani Pharmacology)<br>மருந்தாக்கவியல் (Ayurveda / Siddha/Unani Pharmaceutics), இரசவாதம் (Ayurveda / Siddha/ Unani Alchemy) |
| 4. | அறுவைச் சிகிச்சை | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>அறுவைச் சிகிச்சை (Ayurveda / Siddha/Unani Surgery), உணர்வகற்றியல் (Ayurveda / Siddha/ Unani Anesthesiology), துணை அறுவைச் சிகிச்சை முறைகள் (Ayurveda / Siddha / Unani Para Surgical Procedures) |
| 5. | கண், மூக்கு, தொண்டை | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>கண்,மூக்கு,தொண்டை(Ayurveda / Siddha / Unani ENT), கண் நோய் (Ayurveda / Siddha/ Unani Ophthalmology)இ வாய் நோய் (Ayurveda / Siddha / UnaniOral Diseases) Siddha/ Unani Alchemy) |
| 6. | குழந்தை மருத்துவம் (பாலர் நோய்கள்) | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>குழந்தை மருத்துவம் (பாலர் நோய்கள்) (Ayurveda / Siddha / Unani Pediatrics) |
| 7. | மகப்பேறு மற்றும் பெண்நோயியல் | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>மகப்பேறு மற்றும் பெண்நோயியல்(Ayurveda / Siddha / Unani Gynecology and Obstetrics) |
| 8. | பூதவியல் | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/ சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>பூதவியல் மற்றும் உளவியல் நோய் (Ayurveda / Siddha / Unani Demenology) |
| 9. | நச்சியல் | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>நச்சியல் (Ayurveda / Siddha/Unani Toxicology) |
| 10. | உள்நாட்டு மருத்துவம் | பின்வரும் துறையொன்றில் ஆயுர்வேத/சித்தாயுர்வேத/ யூனானி பிரிவில் எம்.டீ. பட்டம் பெற்றிருத்தல்.<br>உடைவு முறிவுச் சிகிச்சை, கட்டி, காயங்களுக்கான சிகிச்சை, தீக் காயங்களுக்கான சிகிச்சை, சூடாக்கி உட்செலுத்தும் சிகிச்சை, அக்யூபஞ்சர் சிகிச்சை, கண் மருத்துவம், பாம்புக்கடி மருத்துவம், பாம்பு விசம் மருத்துவம். |

ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (ஆராய்ச்சி) வகுதி மற்றும் உள்நாட்டு மருத்துவ முறை தொடர்பிலான தேசிய நிறுவனத்தின் (கல்வி) வகுதி, விசேட நிபுணர் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் படிப்பு தகைமைகளுக்கு மேலதிகமாக பின்வரும் பட்டப்பின் படிப்பு தகைமைகளும் சிபாரிசு செய்யப்படும்.

ஆயுர்வேத கோட்பாடுகள் மற்றும் உடற் கூறியல் ஆகிய துறைகளில் ஒன்றில் ஆயுர்வேத, சித்தாயுர்வேத, யூனானி பிரிவில் எம்.டீ பட்டம் பெற்றிருத்தல்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.